**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 06.10.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2023-2024

### மூன்றாம் கட்ட உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission III)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் , இணைப்புக் கல்லூரிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கான மூன்றாம் கட்ட உடனடி மாணவர் சேர்க்கை (**Spot Admission III**) 10.10.2023 அன்று நடைபெற உள்ளது.

**உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission) நடைபெறும் விதம்: நேரடி கலந்தாய்வு**

உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கலந்தாய்விற்குரிய குறிப்பிட்ட தேதியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயமுத்தூரில் வந்து கலந்து கொள்ள வேண்டும் . மாணவர்களுக்கான வருகைப் பதிவேடு காலை 8 மணி முதல் 10 மணி வரை பெறப்படும்.

**உடனடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ள நிபந்தனைகள்:**

- உடனடி மாணவர் சேர்க்கை (Spot Admission) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளுக்கு மட்டுமே பொருந்தும். உறுப்புக் கல்லூரிகளுக்கு பொருந்ததாது.
- உடனடி மாணவர் சேர்க்கையில் இடம் கிடைக்கப்பெற்ற மாணவர்களிடமிருந்து மட்டுமே கலந்தாய்வு கட்டணம் பெறப்படும் மற்றும்
- உடனடி மாணவர் சேர்க்கைக்கு நகர்வு முறை (Sliding System) கிடையாது.

**உடனடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்துகொள்ளலாம்?**

பொதுகலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்று கலந்தாய்வினை தவற விட்டவர்கள் மற்றும் இடம் கிடைத்து சான்றிதழ் சரி பார்ப்பில் கலந்து கொள்ளாதவர்கள்.

**உடனடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ள கூடாது**

பொதுகலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்று ஏற்கனவே சேர் க்கை பெற்றவர்கள் அல்லது இடைநிறுத்தம் செய்து கொண்டவர்கள்.

**உடனடி மாணவர் சேர்க்கைக்குரிய கட்டணம்:**

உடனடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ளும் மாணவர்கள் , கல்லூரியை தேர்வு செய்யும் முன் கலந்தாய்வு கட்டணம் செலுத்த தேவையில்லை . கலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்ற மாணவர்களில் SC / SCA/ ST பிரிவுமாணவர்கள் ரூபாய். 1500/- மற்றும் இதரபிரிவினர் ரூபாய். 3000/- செலுத்த வேண்டும்.

**இணைப்புக் கல்லூரிகளுக்கான ஆண்டுக் கட்டணம்**

இணைப்புக் கல்லூரிகளுக்கான ஆண்டுக் கட்டணம் , விடுதிக் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் நீங்கலாக ரூபாய் . 40,000/- முதல் ரூபாய். 50,000/- வரை இருக்கும்.

**உடனடி மாணவர் சேர்க்கை நடைபெறும் நாளன்று பின்பற்ற வேண்டியவை**

- ❖ உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் வளாகத்திற்கு வர வேண்டும்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கையின்போது இணைப்புக் கல்லூரிகளுக்கான உணவு மற்றும் தங்குமிடக்கட்டணம் குறித்த விவரங்களை, மாணவர்கள் இணைப்புக் கல்லூரி ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்துகொண்ட மாணவர்களின் வருகைப் பதிவேடு குறிக்கப்பட்டு, தரவரிசை நிர்ணயிக்கப்படும்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கையின்போது மாணவர்களுக்கு கல்லூரி காலியிடம் திரையில் தெரிவிக்கப்படும்.
- ❖ தரவரிசையின் அடிப்படையில், மாணவர்கள் கல்லூரி மற்றும் பட்டப் படிப்பினை தேர்வு செய்ய அழைக்கப்படுவார்கள்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கையின்போது இடம் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு கட்டணத்தை செலுத்தி உடனடியாக கல்லூரியில் சேரலாம், பணம் கட்டுவதற்கான வசதி பல்கலைக்கழக வளாகத்திலேயே செய்யப்பட்டு இருக்கும்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கையின் போது சாதியின் அடிப்படையிலும் மற்றும் கல்லூரி வாயிலாக கல்லூரியிலோ அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டவுடன், காத்திருப்பு பட்டியல் உருவாக்கப்படும்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கை நடைபெற்ற, ஒரு வார காலத்திற்குப் பிறகு மாணவர் சேர்க்கை காலியிடங்கள் ஏதேனும் இருந்தால் மீண்டும் ஒரு உடனடி மாணவர் சேர்க்கை மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி நடத்தப்படும்.
- ❖ உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் அளிக்க இயலாது.

உடனடி மாணவர் சேர்க்கைக்கான வகு ப்புவாரியான இட ஒதுக்கீடு , கலந்தாய்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் மற்றும் காலியிடங்களுக்கான அட்டவணை **09.10.2023** அன்று http://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தில் வெளியிடப்படும் . மாணவர் சேர்க்கைக்கான காலியிடங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

உடனடி மாணவர் சேர்க்கை குறித்த விவரங்களை அறிய விரும்பும் மாணவர்கள் 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் முகவரியை அணுகலாம்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**